2. அறிவிப்புகள் - தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு (Orientation Course) நடைபெறவுள்ளது. அக்கருத்தரங்கு இன்று மாலை 4-30 மணிக்கும், 8-9-2001, 10-9-2001 ஆகிய நாட்களில் மாலை 4-30 மணிக்கும் தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் 10-வது தளத்தில் உள்ள மாநாட்டு கூட்ட மண்டபத்தில் நடைபெற உள்ளதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கருத்தரங்கைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

குன்னூர் தொகுதி, பேரட்டி கிராமம், இந்திரா நகரிலுள்ள குடிசைகள் மீது மரங்கள் விழும் அபாயம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கா. கந்தசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர் தாலுகா, பேரட்டி கிராமம், இந்திரா நகரில் வசிக்கும் ஏழைப் பொதுமக்கள், ஆதிதிராவிட பொதுமக்கள் வசிக்கும் 50 குடிசைகள் மீது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கந்தசாமி, அதிலே உள்ள வாசகத்தை வாசிக்க வேண்டும்.

திரு. கா. கந்தசாமி: அதே வாசகத்தைத்தான் நான் வாசிக்காமல் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாசிக்காமல் சொல்லக் கூடாது. அதிலே இருப்பதை அப்படியே வாசிக்க வேண்டும். கவன ஈர்ப்பு என்பது அதுதான்.

[2001 செப்டம்பர் 5

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, பேரட்டி கிராமம், இந்திரா நகரில் உள்ள ஏழைப் பொதுமக்கள் வசிக்கும் 50 குடிசைகள் மீது எந்த நேரமும் மாங்கள் விழுந்து விடும் அபாயம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எஸ். எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

அறிக்கை

இந்திரா நகர், நீலகிரி மாவட்ட குன்னூர் வட்டாட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. அங்கே 15 வருடங்களுக்கு முன்பு ஊராட்சி ஒன்றியத்தால் எழுப்பப்பட்ட தைல மரத் தோட்டங்கள் அமைந்துள்ள பகுதியில் மக்களால் குடிசைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி இதுவரை மழை போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு ஆளானதில்லை. மேலும், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் இருமுறை அப்பகுதியை நேரில் தணிக்கை செய்து, இந்திரா நகரில் மரங்களால் உயிருக்கோ அல்லது மக்கள் சொத்துக்கோ பாதிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துள்ளார். ஆகவே, மரங்களால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற கேள்விக்கு இடமில்லை. இதனை நீலகிரி மாவட்ட ஆட்சியரும் உறுதி செய்துள்ளார்.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதில் எந்த ஆபத்தும் இல்லை என்று கோட்டாட்சித் தலைவரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த மரங்கள் எல்லாம் மிகப் பெரிய மரங்கள். தைல மரங்களும், சில்வர்-ஓக் மரங்களும் அங்கே இருக்கின்றன. மண் அரிப்பு ஏற்பட்டு வேர்கள் எல்லாம் வெளியே தெரிகின்றன. காற்றடித்தால், மழை பெய்தால், அந்த மரங்கள் குடிசைகள் மீது விழுந்து உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது.

2001 செப்டம்பர் 5] [திரு. கா. கந்தசாமி]

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, உயிர்ச் சேதம் ஏற்படாமல் இருக்க அந்த மரங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி என்பது கிராம மேய்க்கால் பகுதி. இந்த நிலம் வருவாய்த் துறைக்குச் சம்பந்தப்பட்டது. அங்கே மரம் இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது வன இலாகாவுக்குச் சொந்தம், ஆகையினால் அதை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார். இது வன இலாகாவுக்குச் சொந்தம் அல்ல. Revenue Department—வருவாய்த் துறைக்கு-சம்பந்தமானது. அது மட்டுமல்ல, அந்த இடத்திற்கு கோட்டாட்சியரும், வட்டாட்சியரும் நேரில் சென்று பார்த்து, அந்த மரங்கள் மிகப் பெரிய மரங்கள், காற்றினாலோ, மழையினாலோ அல்லது எந்த ஆபத்தினாலோ விழக்கூடிய மரங்கள் அல்ல என்றும், இப்போது இருக்கின்ற அந்த 50 குடிசைகளும் ஆக்கிரமிப்புப் பகுதிகள் என்றும், அந்த மரங்களை எடுத்தால் அந்தப் பகுதியையும் ஆக்கிரமிப்புச் செய்துவிடுவார்கள் என்றும், ஆகையினால் அந்த மரங்களை எடுக்கத் தேவையில்லை என்றும், அதனால் எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்றும், மாவட்ட ஆட்சித் தலைவரும், கோட்டாட்சித் தலைவரும், தாசில்தாரும் பதில் கூறியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல்

(இ) கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம்

...

(அ) கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2001-2002* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *27*, ஊரக வளர்ச்சி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.